**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>**

**<u>அசல் வழக்கு எண்.53/2022</u>**

2024- ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02– ஆம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW2 - வது நபரின் வாக்குமூலம் (1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முன்சிரா @ முன்சிராபேகம் | தொழில் | : | இல்லத்தரசி |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | தாவுத்கனி | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | குன்னம் | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 52/2024 |

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :-

1) தற்போது என்னிடம் காட்டப்படும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் என்ன விபரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 30.11.2022 ஆம் தேதி நான் நீதிமன்றத்தில் சாட்சியம் தினத்தன்று தாவா சொத்து எனது பெயரில் இருந்ததா என்றால் இல்லை. எனது கணவர் பெயரில் இருந்தது. தாவா சொத்தை எனது கணவருக்கு நான் எப்போது எழுதிக் கொடுத்தேன் என்றால் 2021 ஆம் வருடம் எழுதிக் கொடுத்தேன். மேற்படி எனது கணவருக்கு எழுதிக் கொடுத்த விபரத்தை நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் விவசாயம் செய்து வருகிறார். நான் இல்லத்தரசியாக இருக்கிறேன்.

2) எனது கணவர் விவசாயம் செய்து வரும் நிலம் எந்த வருடம் வாங்கப்பட்டது என்றால் சுமார் 8 முதல் 9 வருடங்களுக்கு முன்பு எனது கணவரின் அண்ணனிடம் இருந்து வாங்கினோம். அதற்கு முன்பு எனது கணவர் எங்கிருந்தார் என்றால் வெளிநாட்டில் இருந்தார். எனது கணவர் துபாய் மற்றும் சவுதி ஆகிய நாடுகளுக்கு மாற்றி மாற்றி சென்று வருவார். எனது திருமணத்திற்கு முன்பிருந்தே அவர் வெளிநாடு சென்று வருவார். அவர் வெளிநாட்டில் அரபி வீட்டில் வேலை செய்தார். துபாயிலும் அதே வேலை தான் செய்து வந்தார். எனது கணவருக்கு துபாய் மற்றும் அரபியில் வேலை செய்த வகையில் அங்குள்ளவர்களிடம் நல்ல பழக்கும் உண்டு என்றால் சரிதான். வெளிநாட்டில் எனது கணவர் இருந்த பழக்கத்தில் நிறைய நபர்களுக்கு விசா எடுத்து கொடுப்பாரா என்றால் எனது தங்கையின் கணவருக்கு மட்டும் விசா எடுத்துக் கொடுத்துள்ளார். வேறு யாருக்கும் எனது கணவர் விசா எடுத்துக் கொடுத்ததில்லை என்றால் சரிதான்.

DMJ Court Kunnam

3) அண்ணாதுரை மற்றும் பிரதிவாதி குருநாதன் ஆகியோரை தெரியுமா என்றால் தெரியும். நல்லது கெட்டதுகளுக்கு சென்று வருவோமா என்றால் சென்று வருவோம். வாதி மற்றும் பிரதிவாதியின் மற்றொரு சகோதரரான ரவி என்பவருடைய இறப்பிற்கு நாங்கள் சென்றோமா என்றால் நான் அந்த சமயத்தில் எனது அம்மா வீட்டில் இருந்ததால் போகவில்லை. எனது கணவரின் பூர்வீகம் குன்னம் என்றால் சரிதான். எனது சொந்த ஊர் விருத்தாசலம் ஆகும். எனது கணவர் குன்னத்தில் தான் படித்தார் என்றால் சரிதான். அவர் 4,5 ஆம் வகுப்பு தான் படித்துள்ளார். அதிகம் படிக்கவில்லை. எனது கணவரின் பூர்வீக வீடு ஊருக்குள் உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டை கொஞ்சம் தூரம் தாண்டி சென்றால் வாதி, பிரதிவாதிகளின் வீடு இருக்கும் என்றால் பள்ளிவாசலை தாண்டி அவர்கள் வீடு உள்ளது.

4) எனது கணவருக்கும் வாதிக்கும் நல்ல பழக்கம் வழக்கம் உள்ளதா என்றால் உள்ளது. நல்லது கெட்டதற்கு சென்று வருவோம். அதே போல் ஊரில் உள்ள அனைவர் வீட்டு நல்லது கெட்டதிற்கு சென்று வருவோமா என்றால் இல்லை. எனது கணவருக்கு தெரிந்தவர்கள் வீட்டிற்கு மட்டுமே செல்வோம். வாதி கொஞ்ச காலம் துபாய் போயிருந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். துபாயில் அண்ணாதுரையும், எனது கணவரும் சந்தித்துக் கொள்வார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அண்ணாதுரைக்கு விசா எடுத்துக் கொடுத்தது எனது கணவர் என்று சொன்னால் சரியல்ல. அதை எனது கணவரிடம் கேட்டால் தான் தெரியும் என்றால் சரிதான். எனது கணவர் சாட்சி சொல்ல வருவாரா என்றால் வருவார்.

5) நான் கிரயம் வாங்கியுள்ள தாவா சொத்தின் விஸ்தீர்ணம் 4 செண்ட் ஆகும். மேற்படி சர்வே எண்ணின் மொத்த விஸ்தீர்ணம் தெரியுமா என்றால் 31 செண்ட் ஆகும். நாங்கள் தாவா சொத்தை எப்போது வாங்கினோம் என்றால் 1995 ஆம் ஆண்டு வாங்கினோம். அப்போது யார் பெயரில் இருந்தது என்றால் அண்ணாதுரை, ரவி, குருநாதன் (எ) சுப்ரமணியன் ஆகியோர் பெயர்களில் கூட்டாக இருந்தது. அவர்கள் தங்களுக்குள் எப்போது பிரித்துக் கொண்டார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நாங்கள் வாங்கும் போது கூட்டாக இருந்தது. சர்வே எண். 231/3–ல் 62 செண்டில் 4 செண்ட் வாங்கியதாக தான் எனது கிரய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) நான் கிரயம் வாங்கியதற்கு பிறகு 2010–ல் சுப்ரமணியன் (எ) குருநாதன் என்பவர் பிரித்துக் கொடுத்தார். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி சுப்ரமணியன் (எ) குருநாதன் கிராம நிர்வாக அலுவலர் மூலமாக பிரித்துக் கொடுத்த விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 1995 ஆம் ஆண்டு நான் கிரயம் வாங்கிய போது மூன்று நபர்களும் வந்து கையெழுத்து செய்தார்கள். நாங்கள் கம்பி வேலி போட்டு எங்கள் இடத்தை பாதுகாப்பாக வைத்திருந்தோம். பின்னர் 2010 ஆம் ஆண்டு எங்களுக்குரிய இடத்தை வி.ஏ.ஓ மூலம் அளந்து பிரித்துக் கொடுத்தார்கள். 1995 –ல் இடம் வாங்கிய பிறகு வடபுறம் தோராயமாக வேலி போட்டிருந்தோம் என்றால் சரிதான்.

DMK Judgement

7) நாங்கள் கம்பி வேலி போட்டிருந்த இடத்தில் 4 செண்ட் இருந்ததா அல்லது 5 செண்ட் இருந்ததா அல்லது 3 செண்ட் இருந்ததா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆனால் நான் கெல்லையில் குறிப்பிட்டபடி கம்பிவேலி போட்டிருந்தேன். இடத்தை வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் பார்த்தோமா என்றால் நான் பார்க்கவில்லை எனது அப்பா பார்த்தார். அவர் தற்போது இறந்துவிட்டார். மேற்படி ஆவணத்தை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 3 ம் ஆம் பிரதிவாதி ரோசகிளியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் எங்கிருந்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். அவர் பள்ளிவாசல் தாண்டியுள்ள பழைய வீட்டில் இருந்தார். சில நேரம் அங்கிருப்பார், சில நேரம் குருநாதன் வீட்டில் இருப்பார். கடைசி காலத்தில் அவர் குருநாதன் வீட்டில் தங்கியிருந்து இறந்துபோனார் என்றால் சரிதான். நான் இறப்பிற்கு சென்றேனா என்றால் சென்றேன்.

8) ஆனால் பூபதி என்பவர் வரவேண்டாம் என்று சொன்னதால் திரும்பி வந்துவிட்டோம். அந்த பூபதி, அண்ணாதுரையின் மைத்துனரா என்றால் இருக்கலாம். மாமா என்று கூப்பிடுவார். ரோசகிளியின் தாத்தா ரோசகிளிக்கு 31 செண்டை தானமாக எழுதிக் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. ரோசகிளி வாதி பிரதிவாதிகளின் பெரியப்பாவான கணேசன் என்பவரின் மனைவி என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ரோசகிளி அவருக்கான சொத்தை சுப்ரமணிக்கு கிரயமாக எழுதிக் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் உதவி செய்யும் நோக்கத்துடன் அண்ணாதுரைக்கு விசா எடுத்துக் கொடுத்தார் என்றாலும், ஒரு செக்யூரிட்டி நோக்கத்திற்காக இந்த இடத்தை எங்களுக்கு எழுதிக் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல.

9) தாவா இடம் 31 செண்ட் இடம் ரோசகிளிக்கு பாத்தியப்பட்டது என்றாலும், மேற்படி ரோசகிளிக்கு பாத்தியப்பட்ட 31 செண்ட் இடத்தை ரோசகிளி குருநாதனுக்கு எழுதிக் கொடுத்த விபரத்தை தெரிந்துக் கொண்டு தற்போது தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் குருநாதன் எனது பெயரிலும், வாதி அண்ணாதுரை பெயரிலும் அசல் வழக்கு எண். 607/2021 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவருக்கு நான் தாவா சொத்தை எப்போது எழுதிக் கொடுத்தேன் என்றால் 2021 ஆம் வருடம் தானமாக எழுதிக் கொடுத்தேன். எனக்கு இந்த வழக்கு மற்றும் அசல் வழக்கு எண். 607/2021 நடந்துக் கொண்டிருக்கும் விபரம் பற்றி தெரியுமா என்றால் தற்போது 7, 8 வருடங்களுக்கு முன்பு தான் தெரியும்.

10) அந்த இடத்தை எழுதிக் கொடுப்பதற்கு அண்ணாதுரைக்கு உரிமையில்லை என்றாலும், நாங்கள் ஏமாந்து வாங்கியதை மறைப்பதற்காக தான் எனது கணவர் பெயருக்கு பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நானும், எனது கணவரும் ஒன்றாக தான் இருந்து வருகிறோம் என்றால் சரிதான். தாவா சொத்து தொடர்பாக ஒரு பதிவு ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக எனது கணவருக்கு கொடுத்து போன்று ஒரு

DMK Court

ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. யார் பெயரில் இருந்தால் என்னவென்று எனது கணவருக்கு தானமாக எழுதிக் கொடுத்தேன். தாவா இடத்தை 1995 ஆம் ஆண்டு வாங்கியதில் இருந்து எந்த அனுபவமும் செய்யவில்லை என்றாலும், முள்வேலி போடவில்லை என்றாலும் வரி கட்டியதாக சொல்வது பொய் என்றாலும் சரியல்ல. அந்த மாதிரி எந்த ஆவணங்களும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக காலி மனைக்கு யாரும் வரி செலுத்த மாட்டார்கள் என்றாலும் நானாக ஒரு ரசீதை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் 1995 ஆம் ஆண்டு எந்த தொகையும் கொடுக்காமல் அண்ணாதுரைக்கு விசா எடுத்துக் கொடுத்ததற்காக இடத்தை எழுதி வாங்கிக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. மூன்று நபர்களும் பொதுவாக குடும்ப கடன் வாங்கியதற்காக தான் மேற்படி இடத்தை எழுதிக் கொடுத்தார்கள் என்றால் சரிதான். யாரிடம் கடன் வாங்கினார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

11) அண்ணாதுரையும் எனது கணவரும் பால்ய சினேகிதர் என்பதால் அவருக்கு உதவுவதற்காக தான் நான் எனது கணவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு உதவுவதற்காக எனது கணவர் 610/2021 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் எந்த காலத்திலும் தாவா இடத்தை அனுபவம் செய்யவில்லை என்றாலும், கம்பி வேலி போடவில்லை என்றாலும் சரியல்ல. தற்போது வரை தாவா இடம் எங்களது அனுபவத்தில் தான் இருந்து வருகிறது. எனது அனுபவத்திலா அல்லது எனது கணவரின் அனுபவத்திலா என்றால் முதலில் எனது அனுபவத்தில் இருந்து தற்போது எனது கணவரின் அனுபவத்தில் உள்ளது. நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMunsifCourt Kunnam